பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 120 11—11—1994
இதழ்: 22 விலை ரூபா 5-00

**1995 ஆம் ஆண்டிற்கான**
**திருவழிபாட்டு நாட்காட்டி**

1995 ஆம் ஆண்டிற்கான திருவழிபாட்டு நாட்காட்டி பெற விருப்புவோர் கார்த்திகை மாதம் 20 ஆம் திகதிக்கு முன் திருவழிபாட்டு நிலையத்தில் பதிவு செய்து கொள்ளவும். நன்றி.

இயக்குனர்
திருவழிபாட்டு நிலையம்

* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் *

### கன்னியர், துறவியர், குருக்கள் வாழ்வு பற்றிய ஆய்வில்

# கத்தோலிக்கத்தில் ஆண் ஆதிக்கத்தை ஒழிக்க பெண்கள் சங்கற்பம்

**வத்திக்கானில் நடைபெற்ற ஒரு பேரவையில், உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் ஆண் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டுமென அதிற் பங்குபற்றிய துறவற கன்னியர் கோரியுள்ளனர். பெண்களின் திறமைகளைக் கண்டுணர்ந்து, பெண்ணுரிமைவாதம் திருச்சபைக்குக் கிடைத்த ஒரு கொடை என திருச்சபை அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென இவர்கள் வற்புறுத்துகின்றனர்.**

"பெண்களின் துறவற வாழ்வு கடந்த நூற்றாண்டுகளில் ஆண்களிலேயே பெரிதும் தங்கியிருந்திருக்கிறது. சமுதாயத்திலும், திருச்சபையிலும் பல வாயில்கள் திறக்கப்பட்டுள்ள போதிலும், பெண்களின் குரல் ஆண்களின் குரலினின்று வேறுபட்டது" என பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரி ஸ்டெப்னி மாறி புல்லங்கர் என்பவர் கூறியுள்ளார்.

ஆண்களே ஆதிக்கம் செலுத்தும் திருச்சபையின் நிர்வாக மையமாகிய வத்திக்கான் கியூறியாவிலும், திருச்சபை முழுவதிலும் தகுதிபெற்ற கன்னியர் தீர்மானங்கள் எடுக்கவேண்டிய மேற்பதவிகளை வகிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டும என இவர் கோரியுள்ளார்.

"பங்கு, மறைமாவட்டம், நாடு, வத்திக்கான் ஆகிய பல்வேறு மட்டங்களிலும், ஆணைகளை நிறைவேற்றும் பட்டத்தில் மட்டுமன்றி, சிந்தித்து தீர்மானம் எடுக்கும்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## கொழும்பு பேராயரின் மூன்று வேண்டுகோள்கள்

இலங்கை அப்போஸ்தலர் ஆசா. யோசேவ் வாஸ் அடிகளின் முத்திப்பேறு பட்ட வைபவத்தையொட்டி, விசுவாசிகளின் கவனத்திற்கு மூன்று முக்கிய விடயங்களை முன்வைத்துள்ளார் கொழும்புப் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பர்ணாந்து ஆண்டகை. இந்த முக்கியத்துவமும், தனித்துவமும் வாய்ந்த நிகழ்விற்காக குடும்ப செபத்தின் போது செபிக்குமாறும், குணமளிக்கும் கிறிஸ்துவிடம் திருத்தந்தைக்கு பூரண நற்சுகத்தை இறைவன் அருள வேண்டுமென்று குடும்ப செபத்திலும், திருப்பலி வேளையிலும் மன்றாடவும், இலங்கையின் ஒவ்வொரு கத்தோலிக்கரும், ஏழைகளில் ஏழையும் கூட, தலா ரூபா ஒன்று வழங்கி திருத்தந்தைக்கு கொடுக்கவிருக்கும் அன்பளிப்பில் பங்கு பெற வேண்டுமென்றும், பேராயர் கேட்டுக்கொள்கின்றார்.

### கலாநிதி N. M. சவிரி அடிகளாரின்

## நூல் வெளியீட்டு விழா

அருள்திரு N. M. சவிரி (முத்து), 1978ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்ட கலாநிதி பட்டப் (Ph. D.) படிப்புக்காக ஆங்கில மொழியில் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை "A Catholic Hindu Encounter" (ஒரு கத்தோலிக்க — இந்து எதிர்கை) - எனும் தலைப்பில் அச்சேற்றப்பட்டு நூல் வடிவில் கடந்த மாதம் 26ஆம் திகதி வெளியிடப்பட்டது.

யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற இவ் வெளியீட்டு விழாவிற்கு புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் A I. பேனாட் அடிகளார் தலைமை வகித்து, பல்வேறு சமூகத் துறைகளிலுமிருந்து வந்த பெருந்திரளான பெரியார்கள், அறிஞர்கள், அபிமானிகள் யாவரையும் வரவேற்று தலைமையுரை ஆற்றினார்.

யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் N. பாலகிருஷ்ணன் அவர்களும், யாழ்ப்பாண கல்லூரி முன்னாள் அதிபர் A. ராஜன் கதிர்காமர் அவர்களும் ஆய்வுரைகள் வழங்கினர். இந் நூற்றாண்டின் முற்பகுதியில் ('900—1926) றோமன் கத்தோலிக்கருக்கும் இந்துக்களுக்குமிடையே யாழ்ப்பாணத்தில் நிலவிய உறவுகளின் அடிப்படையில் எழுதப் பெற்ற இந் நூலைப் பெரிதும் பாராட்டியதுடன், இக்காலகட்டத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் ஆற்றிய பங்களிப்பைச் சிறப்பாகச் சித்தரிக்கும் இந் நூல் ஆசிரியரின் ஆக்கத் திறனையும் ஆய்வாளர்கள் பெரிதும் மெச்சினார்கள்.

நூல் ஆசிரியர் கலாநிதி N. M. சவிரி அடிகளாரின் நன்றியுரைக்குப்பின் திருமறைக் கலா மன்றத்தினரால் மேடையேற்றப்பெற்ற "ஒரு தேடல்" எனும் நாடகம் இந் நிகழ்வுக்கு மெருகூட்டியது.

### கல்லூரி பரிசளிப்பு விழாவில்

## மன்னார் ஆயர் பிரதம விருந்தினர்

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 9. 30 மணிக்கு கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் யாழ் ஆயர் பேரருள் திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக மன்னார்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## ஆசியநாட்டு ஆயர் கருத்தரங்கில் யாழ் ஆயர்

ஆசிய நாடுகளின் ஆயர்களுக்கென தாய்லாந்து நாட்டின் தலைநகராம் பாங்கொக்கில் கடந்தமாதம் இடம்பெற்ற தலைமைத்துவம் பற்றிய கருத்தரங்கில் யாழ் ஆயர் இ தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பங்கு பற்றிய பின் தாயகம் திரும்பியுள்ளார்.

## திருத்தந்தைக்கு ஞானப் பூச்செண்டு

எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி இடம் பெறவிருக்கும் ஆசா. யோசேவ் வாஸ் முத்திப் பேறுபெற்ற நிலைக்கு உயர்த்தப்படும் வைபவத்தின்போது திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரிடம் ஒரு ஞானப் பூச்செண்டு கொடுக்கப்படவுள்ளது. (அதற்கான மேலதிக விபரங்கள் பக்கம் 2 இல்.)

### ஆலய அழிவின்

## 1-ம் ஆண்டு நினைவு

குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது குண்டுமாரி பொழிந்து பதில் மூன்று அப்பாவி மக்களை பலியெடுத்த முதலாம் ஆண்டு நிறைவு நாளாகிய எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 13.11.94 அன்று, காலை 11 00 மணிக்கு சிதைந்திருக்கும் அவ்வாலயத்தில் அக்கோரச் சம்பவத்தில் உயிர் நீத்தவர்களின் ஆன்ம சாந்திக்காக சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**காவலன் கிறிஸ்மஸ்**
**இதழுக்கான**
**குறுகிய ஆக்கங்கள்**



**எழுத்தாள அன்பர்களே!**

கிறிஸ்மஸ் இதழுக்கான புதிய ஆக்கங்களை ஒரு தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி, 30-11-94க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

★ சிறிய கருத்துச் செறிந்த ஆக்கங்கள் மாத்திரமே பிரசுரிக்கப்படும்.

(ஆ-ர்

### புனித யுவானியார் ஆலயத்தில்

## உடுவில் ஆர்க் (ArK) நிறுவன நிதி உதவி இன்னிசை நகழ்ச்சி

ஐப்பசித் திங்கள், 18ஆம் நாள், சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முன்றலில், மேற்படி ஆலய இளைஞர் குழுமத்தினால், உளம் ஊனமுற்ற ஆர்க் இல்ல வளர்ச்சி நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட ராஜன்ஸ் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி பி. ப. 5 மணி அளவில் மங்கள விளக்கேற்றலுடன ஆரம்பமாகியது. பங்குத்தந்தை தமது தலைமை உரையில் இவ் ஆலய இளைஞர்கள் மிக ஆவலுதுடனும் பரந்த மனப்பான்மையுடனும், தர்ம சிந்தையுடனும காலநிலை சீரற்ற இந்த நிலையிலும் கூட இந்நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தியது பாராட்டுக்குரியது என்றும், மற்றைய பங்கு இளைஞர்களுக்கு ஒ நல்ல முன்மாதிரிகை என்றும கூறினார். அடுத்து ஆர்க் இல்ல உப தலைவி அருட்செல்வ மிகரெட் தமது உரையில் 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆர்க்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## எம்கருத்து

### திசைமாறும் சமாதானப் பறவை?

நாட்டில் பல்வேறு பகுதிகளில் காணப்படும் வன்முறைகளால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து கவலையடையாதவர் எவருமில்லை. மக்களின் நல்வாழ்வுக்கு ஊறுவிளைவிக்கும் வன்முறைகள் ஆழ்ந்த கவலையைத் தருகின்றன. உயிர்ச் சேதம் ஏற்படுத்தும் கொடுமையை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

ஒழுக்கம், கலாசாரம் என்பவையெல்லாம் நம் நாட்டைப் பொறுத்தவரையில் எப்பொழுதோ கைநெகிழ விட்டவையாகத் தென்படுகிறது. இன்றைய நிகழ்ச்சிகள் ஒரு பாரம்பரிய பண்பாடுள்ள நாட்டில் நடப்பதற்கானவையல்ல. நம்முடைய போக்கே வேறு திசையாக மாறிக்கொண்டிருக்கிறது.

ஆட்சியாளர் எவராயினும், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களெல்லாம் ஒரே கொள்கையின் பக்கம் வேகமாகச் சாய்ந்து வருவதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் ஆட்சியாளரின் சுயநலத் தீயில் பொசுங்கிப் போகின்றன,

எந்த நாட்டுக் குடிமகனும் அரசியல்வாதியை நம்பி முன்னேற்றம் கண்டதில்லை. தன்னலமற்ற அரசியல்வாதிகளைக் காண்பது அரிதிலும் அரிது; இக்காலத்தில் அப்பேர்ப்பட்டவர்கள் இல்லையென்றே தீர்க்கமாகச் சொல்லிவிடலாம்.

ஆள்வதற்கு ஆசைப்படும் அரசியல்வாதிகள் மக்கள் முன்பு வானமும் பூமியும் அடங்காத அளவில் வாக்குறுதிகளை அடுக்கி வைக்கின்றனர்: "ஊழலை அகற்றுவோம்; உரிமையை அளிப்போம்; வறுமையைப் போக்குவோம்; இந்தப் புண்ணிய பூமியில் பூத்துக் குலுங்கும் 'தர்மிஷ்ட' பூங்காவை அமைப்போம்" என்று ஊரெல்லாம் பறைசாற்றுவார்கள்.

தேர்தலில் வெற்றிபெற்றவுடன், ஆள அதிகாரம் பெற்று, உச்சிமேல் உட்கார்ந்துகொண்டு, "என்னைக் கொல்லப் பார்த்தார்கள்; நல்ல காரியங்களைச் செய்வதற்குத் தடைபோடுகிறார்கள்; அவர்கள் ஆண்ட காலத்தில் மக்கள் நலனில் அக்கறை செலுத்தாது காலம் கழித்தார்கள். அதனால் எங்களால் எதையும் தீவிரமாக எடுத்து நடத்த முடியாத அளவுக்குச் சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டன. பொருளாதார களஞ்சியங்களை காலியாக்கிவிட்டனர். இந்த அல்லல்களுக்கெல்லாம் நாங்கள் காரணம் அல்ல; இதற்குமுன் ஆண்டவர்கள்தான் பொறுப்பு" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே காலத்தைப் போக்குவார்கள். இவர்களுடைய நோக்கமெல்லாம் எதிரியைத் திரும்பச் செல்வாக்கு பெறமுடியாமல் ஒழித்துவிட வேண்டும், கடந்த காலத்தில் தம்மை இம்சித்ததற்காக அவர்களை இழித்துக்கூறி நெஞ்சின் வேக்காட்டை ஆற்றிக் கொள்ளவேண்டும் என்பதைத் தவிர, மக்கள் நலன் இவர்களுக்கு முக்கியமல்ல.

மறுபுறத்தில், ஒரு சாரார் தேர்தலில் வென்று ஆட்சிப்பீடம் அமைக்கிறார்களென்றால், தோற்றுப் போனவர் கண்களில் அக்கினி பறக்கிறது. காழ்ப்புணர்ச்சி கண்களைச் சுட்டுப் பொசுக்குகிறது. ஆள்வோருக்கு எல்லாப் பக்கங்களிலும் தொல்லை கொடுப்பதுதான் அவர்களின் ஒரேயொரு நோக்கமாயிருக்கிறது. நாடும் மக்களும் சீரழிவது பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை.

நான்கைந்து நல்லெண்ணம் கொண்டவர்களோடு, நூற்றுக்கு மேற்பட்ட நாணயம் கெட்டவர்களும் நாட்டை ஆள முனவந்துவிட்டால் அங்கே யார் கை ஓங்கி நிற்கும்? சம்பாதிப்பதற்கேயென்று திட்டமிட்டு இந்த அலுவலில் நுழையும் தன்னலக்காரர்களை நுழைவாயிலில் வைத்து மக்கள் இனம் காணத் தவறிவிட்டால், உள் நுழைந்து புரியும் இழி செயல்களை எவ்வாறு — எவரால் தடுக்கமுடியும்?

நாடு ஏன் நலிவுற்றது? அரசியல் ஏன் கெட்டது? என்று கேட்டால், உண்மையான மக்கள் தொண்டர்கள் உரிய பதவிகளில் இல்லை; அத்தகையோரை மக்கள் பதவியில் ஏற்றவில்லை என்பதே பதில்.

குடிமககள் வாழும் அவல நிலையைத் திரைபோட்டு மறைத்து, மக்கள் வாழ்வில் அக்கறையற்று, பொய் பேசி, உண்மை நிலையை மூடி மறைத்து, தம் சுயநலத்தை நிறைவேற்றிக்கொள்ளும் அரசியல்வாதிகள போலவே, நாமும் நம் சமூகவாழ்வில் அக்கறையற்று இருக்கிறோம். நாட்டில் என்ன நடக்கிறது; சமூக வாழ்வில் நமக்கு எவ்வண்ணம் எதிர்ப்புக்கள் ஏற்படுகின்றன; நம்முடைய உரிமைகள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகின்றன; நமது நலன்கள் எங்கெல்லாம் பறிபோகின்றன என்பதைப்பற்றி நம்மில் பெரும்பாலானோர்க்குத் தெரியாது. நாள்கள் ஓடுகின்றன; நாமும் அவற்றோடு ஓடிக்கொண்டிருக்கிறோம். மக்கள் மடிகிறார்கள்! உரிமைகள் தொடர்ந்து பறிபோகின்றன!!

---

★ தேசிய மட்டத்திலான ஆன்மீக ஆயத்தக் குழுவின் அறிக்கை

## யோசேவ் வாஸ் அடிகளாரின் "முத்திப்பேறு" திருநிலைப்படுத்தலுக்கான ஆன்மீக ஆயத்தம்

இலங்கையைப் பொறுத்த மட்டில் இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

1) யோசேவ் வாஸ் அடிகளாருக்கு 'முத்திப்பேறு' பட்டம் வழங்குதல்.
2) இரண்டாம் தடவை ஒரு திருத்தந்தை எமது நாட்டிற்கு வருகை தருதல்.

இரண்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்பது உண்மைதான். ஆனால் கிறிஸ்தவர்களாகிய எம்மைப் பொறுத்தமட்டில் யோசேவ் வாஸ் அடிகளை இலங்கையின் முதன்முதல் முத்திப்பேறு பெற்றவராக பிரகடனம் செய்வது அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. வன்முறைகளாலும், வெறுப்புணர்ச்சிகளினாலும், அழிவுகளினாலும், இறப்புக்களினாலும் எமது நாடு ஊட்டமிழந்து உயிரற்றுக் காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு காலகட்டத்தில் எம்மனைவரையும் தேசிய ஒப்புரவை நோக்கி நீதியும் சமத்துவமுமான ஒரு பாதையில் வழிநடத்திச்செல்லயோசேவ்வாஸ் அடிகள் போன்ற ஒருவர் தேவைப்படுகின்றார்.

எமது வாழ்வானது உலகளாவிய ரீதியிலான இன்பங்கள், மற்றும் பொருட்களின் ஆதிக்கங்கள் அற்ற நிலையிலும் அர்த்தமுள்ளதாக, ஆழமானதாக இருக்கமுடியும் என்பதை யோசேவ் வாஸ் அடிகளார் தமது எளிமையானதும், தூய்மையானதுமான வாழ்வின் மூலம சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

வத்திக்கான் நாட்டின் தலைவர் என்ற முறையில் திருத்தந்தை இலங்கைக்கு விஜயம் செய்வதால் அவருக்குரிய உத்தியோகபூர்வ மதிப்பும் மரியாதையும், பாரிய அளவிலான வரவேற்பும் வழங்க வேண்டியது இயற்கையானதும் தவிர்க்க முடியாததுமாகும். எனினும் திருத்தந்தையின் வருகையானது கிறிஸ்தவர்களாகிய எம்மைப் பொறுத்தமட்டில் அவர் பல தடவைகளில் எடுத்தியம்பியுள்ளது போல், ஒரு "ஒப்புரவிற்கான யாத்திரை" என்பதனை தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். எனவே ஒப்புரவின் யாத்திரீகர்களாக யோசேவ் வாஸ் அடிகளாருக்கு 'முத்திப்பேறு' பட்டம் வழங்கும் இடத்திற்கு செல்வோம்.

கடந்த பல வருடங்களாக எமது நாடானது வன்முறை, வெறுப்புணர்வு, அழிவு, மரணம் என்பவற்றின் மூலம் பிளவுபட்ட ஒரு நாடு என்ற அபிப்பிராயத்தை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ளோம்.

எம் அனைவரையும் ஒன்று சேர்த்து ஒற்றுமைப்படுத்தி குணப்படுத்தியருள யோசேவ் வாஸ் அடிகளார் எமக்காக இறைவனிடம் பரிந்துபேசுவாராக. இதற்கு ஒரு ஆழ்ந்த ஆன்மீக ஆயத்தமானது அத்தியாவசியமானது. நாம் இறைவனுக்கெதிராகவும் எம் சகோதரங்களுக்கு எதிராகவும் பாவம் செய்துள்ளோம். எனவே தாழ்ச்சியுடனும், நொறுங்கிய உள்ளத்துடனும் ஒப்புரவின் யாத்திரீகர்களாக இந்த வைபவத்தில் பங்கு கொள்வோம்.

ஒப்புரவிலும், ஆன்மீக தயாரிப்பிலும் எம்மை ஈடுபடுத்திட அதற்குரிய செயற்திட்டங்களில் ஈடுபடுதல் அவசியமாகும். திருவருகைக்காலத்தின் முதலாம் ஞாயிறு தொடக்கம் தை மாதம் 15ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதி இத் தயாரிப்பின் முதற்கட்டமாகும். இக்காலப்பகுதியில் நத்தார் ஞாயிறை தவிர்த்து ஏழு ஞாயிற்றுக்கிழமைகள் உள்ளன. இந்தக்கால இடைவெளியில் பயன்படக்கூடிய செபங்களும், ஆலோசனைகளும், குறிப்புக்களும் அனைத்து பங்குத்தந்தையர்களுக்கும் மற்றும் துறவற சபைத்தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்படும். அத்துடன் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பயன்படக்கூடிய ஆலோசனைகளும், குறிப்புக்களும் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாம் கட்ட தயாரிப்புக்காலப்பகுதியான 1995ஆம் ஆண்டு தைமாதம் 16 தொடக்கம் 20ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதி மிகவும் ஆழ்ந்த அளவிலான தயாரிப்பிற்கான காலப்பகுதியென எதிர்பார்க்கப்படுகிறது. யோசேவ் வாஸ் அடிகளுடைய 'முத்திப்பேறு' சடங்கில் பங்குகொள்வதற்கான யாத்திரையில் கலந்து கொள்ள வெளி ஆயத்தங்களில் ஈடுபடும் வேளையில் மக்கள் அவர்களுடைய ஆன்மீக ஆயத்தத்தின்முக்கியத்தை மறந்துவிடாதிருத்தல் மிக முக்கியமாகும்.

இரண்டாம்கட்ட தயாரிப்பு வேளையில் பயன்படக்கூடிய ஆலோசனைகளும், குறிப்புகளும் வேறாக பின்னர் அனுப்பிவைக்கப்படும்.

அருள்சகோதரி பப்ரிஸ்ட் குருஸ்
ஆன்மீக ஆயத்த தேசியச் செயலர்.

அருள்திரு. இம்மானுவேல் பெர்னாண்டோ,
ஆன்மீக ஆயத்த தேசியத் தலைவர்.

---

### யார் இவர்?

★ ஆடி, ஓடி அலுத்துக் களைத்து நோய்வாய்ப்பட்டுச் சாகும் மனிதனுக்குக் காட்டுக்கு நடுவே இருக்கும் ரோட்டைக் காட்டுவதுபோல், ஞானத்தை ஊட்டுபவன்—நல்லாசிரியன்.

★ பகுத்தறிவுத் தெய்வத்தை பக்கத்தில் காணும் விருப்பத்தின் உருவமே—நல்லாசிரியன்.

★ உள்ளத்தில் உருவாகும் உருவமற்ற கேள்விகட்கு ஞான ஒளியூட்டி உபதேசம் செய்பவன்
— நல்லாசிரியன்.

● R. அதிதி

---


### வண. யோசேவ் வாஸ்
அடிகளாரின்
முத்திப்பேற்றிற்கும், திருத்தந்தையின் வருகைக்கும் ஆயத்தமாக
## ஞானப் பூச்செண்டு

1. திருப்பலிகள்.
2. நற்கருணைச் சந்திப்புக்கள்.
3. திருமணித்தியாலங்கள்.
4. சிலுவைப் பாதைகள்.
5. இன்பங்கள், பொழுதுபோக்குகள், ஆடம்பரங்கள் ஆகியவற்றைத் தியாகம் செய்தமை.
6. செபமாலை.
7. பிறர் அன்புக் கிரிகைகள்.
8. உடல், உள துன்பங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தமை.

திருத்தந்தையின் கருத்துக்களுக்காகவும், இலங்கைத் திருச்சபையின் மறுமலர்ச்சிக்காகவும் ஒப்புக்கொடுக்கப்படும் ஞானப்பூச்செண்டு, 1995 ஜனவரி 21 ஆம் திகதி திருப்பலிக் கொண்டாட்டத்தின் போது திருத்தந்தையிடம் கொடுக்கப்படும். உங்களது ஞானப்பூச்செண்டு தயாரானதும் 1994 நத்தார் விழாவிற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

ஞானப் பூச்செண்டு,
அருள்திரு அன்ரன் மல்லவியாராச்சி,
'சாங்டா மரியா'.
ஹல் ஒலுவ பாதை,
கண்டி.

# ஒரே ஒரு தேவை

— ஜெபா —

இவ்வுலகில் மனிதன் வாழுகின்ற நாட்களில் பல தேவைகளோடு வாழ்கின்றான். அந்தத் தேவைகளுக்காக அவன் இறைவனை நோக்கி மன்றாடவும் தவறுவதில்லை. 'எனக்கு கல்வியைக் கொடு. எனக்கு நல்ல தொழில் வாய்ப்பைக் கொடு...' என்று தமது தேவைகளை இறைவன்பால் எடுத்துச் சொல்லி மன்றாடுவதும், அத்தேவைகளுக்காக இவ்வுலகில் அலைந்து திரிவதும் மனித வாழ்வில் இயற்கையானது.

இப்படியான பல தேவைகளோடு வாழுகின்ற ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவனுக்காக நாம் இறைவனைப் பார்த்து கேட்பது ஒரே ஒரு தேவையைப்பற்றித்தான். 'ஆண்டவரே முடிவில்லா இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும்', இந்த ஒரே தேவைக்காகத்தான் மன்றாடுகிறோம். இறந்துபோன ஆன்மாவும் இந்த ஒரே தேவையை-முடிவில்லா வாழ்வைத்தான்—தேடுகின்றது.

உயிரோடு வாழ்பவருக்கு வேறு தேவைகள். இறந்தவர்களுக்கு வேறு தேவை என்ற எண்ணம் தவறு. இறந்தவர்களாயினும் [உயிரோடு வாழ்பவர்களாயினும் எல்லோர்க்கும் இருப்பது ஒரே தேவைதான். நாம் முடிவில்லா வாழ்வை அடையவேண்டும் என்பது மட்டும்தான் எமது ஒரே தேடலும், வேண்டுதலுமாக அமைய வேண்டும்.

உயிரோடு வாழும் நாம் முடிவில்லா வாழ்வுக்காக வேண்டும் போது அந்த வாழ்வையடைய இவ்வுலகில் எமக்கு எவை எவை தேவையோ அவையனைத்தையும் இறைவன் எமக்கு அருள்வார்.

''கடவுளின் அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள்! இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும்'' (மத். 6:33).

ஆகவே ''நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே'' என்று இறந்தவர்களுக்காக மட்டும் மன்றாடுவதோடு நிற்காமல், ''நித்திய இளைப்பாற்றியை எம் எல்லோருக்கும் அளித்தருளும் ஆண்டவரே'' என்று மன்றாடுவது அதிக பொருத்தமானதாகும்.

# மௌனம் ஒரு தெய்வீகக் கலை

● N. மீரா

மௌனம் அது ஒரு தெய்வீகக் கலை. இதை எல்லாராலும் இலகுவில் சாதித்துவிட முடியாது. மௌனம் ஒரு மகத்தான ஞானம். சள சளவென்று பேசுகிறவன் எவ்வளவு பெரிய கெட்டிக்காரனாக இருந்தாலும், தன் பலவீனத்தைக்காட்டிக் கொள்கிறான். மௌனி முட்டாளாக இருந்தாலும் பலசாலியாகக் காணப்படுகிறான். ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று விரும்பி, அதைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துகிறவன் பெரிய மரியாதையைப் பெற்று விடுகிறான். ஆனால், சிறிய விஷயத்தைக்கூட வளைத்து வளைத்துப் பேசுகிறவன் கேலிக்கு ஆளாகுகிறான்.

ஞானிகள் சில விஷயங்களை கூறுகிறார்கள். அவை பொன் மொழிகளாகி விடுகின்றன.' பைத்தியக்காரன் பதினாயிரம் பேசுவான். அவை சிந்துவாரில்லாமல் போய் விடுகின்றன.

ஆரவாரங்கள் வெறும் மயக்கங்கள். அசைவது பலவீனத்தைக்காட்டுகின்றது. அசையாதது உறுதியைக் காட்டுகின்றது. கடலில் ஆழமான பகுதியில் அலைகள் இருக்காது. சலனமற்ற மௌனம் பல அர்த்தங்கள் கொண்டது. பேசாமல் இருப்பவனே பெரிய விஷயத்தைச் சொல்பவன்.

ஆரோக்கியத்திற்குக் கூட மௌனம் மிக அவசியமாகின்றது. மௌனமாக இருப்பவனுக்கு ஆகாரம் குறைவாகத் தேவைப்படுகிறது. காதலில் கூட ஜாடையில் இருக்கிற சுகம், வாய் மொழியில் இல்லை. மனிதர்கள், மிருகங்களைவிட மலைகளுக்கு அதிக வயது. காரணம் அவை பேசாமலும் அதிர்ச்சி அடையாமலும் இருப்பதே- ஏன் தெய்வம் கூட பேசுவதில்லையே. கோவிலில் இருக்கும் சிலை வரும் பக்தர்களிடம் பேசத் தொடங்குமானால், பக்தனுக்கே அலுப்புத் தட்டி விடாதா? எனவே பேசாமல் இருப்பது பெருந்திறமை. பேசும் திறமையைவிட அது மிகப் பெரியது.

# மரணம் மகிழ்வின் உயர்நிலையாகும்

மரணம் என்றதும் மனிதன் அஞ்சி, நடுங்கி, ஓடுகிறான். ஆனால் உலகில் மரணம் தாண்டவமாடுகிறது. எதன் முன்னும் வீராப்புப் பேசும் மனிதன் மரணத்தின் முன் மௌனியாயிருக்கிறான். விஞ்ஞானத்தின் உதவி கொண்டு சுகபோக வசதிகளைத்தேடி இன்ப சுகத்திலும், பாவச் சேற்றிலும் மூழ்கி வாழும் மனிதன் முடிவில் உலகில் யாவையும் விட்டு, தன்னந்தனியாக கல்லறையில் புதைக்கப்படுகிறான். அதற்குள்ளேயே அழுகத் தொடங்குகிறான். கள்வனைப்போல, மின்னலைப் போல எதிர்பாராத நேரத்தில் மரணம் வரும். இந்த மரணத்தில் இருந்து தப்பி வாழ வேணும் என்ற விருப்பத்தினால், தமது விசுவாசங்களை இழந்து, மாயவித்தைகளில் மயங்கி மந்திர தந்திரங்களுக்கு பணங்களை செலவு செய்வோரும் இல்லை எனக் கூறமுடியாது. படைத்தவன் வா என அழைக்கும் போது படைக்கப்பட்டவன் அனைத்தையும் அப்படியே போட்டு விட்டு செல்லவேண்டியது தான். படைத்தவனின் வேளை வரும் போது படைக்கப்பட்டவனின் மாயவித்தை, மந்திரதந்திரங்கள் படைத்தவன் முன் எங்கே?

கிறிஸ்தவர்கள் மரணத்திற்கு அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் மரணத்தின் மூலமாக இறைவனைக் காண்போம். புனிதர்களின் புதிய உலகம், பிறந்ததினம்-மரணமே, ''பாவம் கொடுக்கும் கூலி சாவு'' ''கடவுள் அளிக்கும் அருட்கொடை நமதாண்டவர் யேசுவுக்குள் முடிவு இல்லா வாழ்வு'' ''மரணத்தினால் எமக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அழிக்கப்படுவது இல்லை'' மண்ணக வாழ்வின் உறைவிடம் அழிந்ததும் விண்ணகத்தில் நித்திய வீடு ஆயத்தமாக இருக்கிறது. புனித சின்னப்பர் மரணத்தைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகிறார். 'எனக்கு வாழ்வு என்பது கிறிஸ்துவே, சாவது ஆதாயமே' என்று'ஆண்டவரில் இறப்போர் பேறு பெற்றோர்' என திருவெளிப்பாடு நமக்கு கூறுகிறது. ஆகவே கிறிஸ்தவனுக்கு மரணம் என்பது மகிழ்வின் உயர் நிலையாகிறது.

இறந்தவர்களின் ஆன்மசாந்திக்காக எம்மால் இயன்ற செபம், தபம், தானதருமம் ஞானப்பலன்கள், நற்செயல்களைப் புரிந்து ஆன்மாக்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும். விஷேசமாக இறந்தவர்களின் ஆன்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுத்து மன்றாட வேண்டும். ஏனெனில் அவர்கள் தமது பாவக் கடன்களைத் தீர்த்தால் தான் இறைவனைக் காணலாம்.

உத்தரிக்கிற ஸ்தலத்து ஆன்மாக்களின் உத்தரிப்புக்கடனை மன்னித்து அவர்களுக்கு நித்திய பேரின்ப மோட்ச பாக்கியத்தை கொடுத்தருளச் சித்தம் கொள்ளும்படி தினமும் இரக்கத்தின் இறைமகனிடம் வேண்டுவோம். விஷேசமாக யாராலும் மன்றாடப்படாத ஆன்மாக்களுக்காகவும், நீண்ட காலமாக உத்தரிப்பு ஸ்தலத்திலே வேதனைப்படும் ஆன்மாக்களுக்காகவும் மன்றாடுவோமாக. எம் மன்றாட்டுக்களில் அவர்களின் வேதனைகள் குறைக்கப்படும். அதே வேளை எமக்கு இறைவனின் அருள் நிறையும்.

''இந்தச் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கும் சிலருக்கேனும் நீ விடுதலை பெற்றுக் கொடுப்பாயானால் நீ பாக்கியவான். ஏனெனில் பரகதியில் உனக்கு நண்பர்கள் இருப்பார்கள்'' என்று புனித மார்க்கரீத்து மரியம்மாள் எழுதி வைத்திருக்கின்றாள். இதனை மனதிற் கொண்டு மரித்த சகல விசுவாசிகளுக்காகவும் இந்த கார்த்திகை எனும் அழகான மாதத்திலே கை கொடுத்து உதவுவோமாக.

செல்வி சி. ஆன்சலா ராஜினி
(மறையாசிரியர்)
மாங்குளம் பங்கு

# மரணம் மகிமையின் கிரீடம்

மனிதன் உலகில் வாழும் வரை, துன்பங்கள் தொடர்கதையாக தொடருகின்றன. மரணம் முடிவில்லா வாழ்வின் நுழைவு என்பர். வாழ்க்கையை முழுவதுமாக வாழ்ந்தவர்கள், சாவதற்குப் பயப்படுவதில்லை. மரணம் என்பது வாழ்க்கையின் இயற்கையான முடிவு.

இன்று மரணம் பல்வேறு வடிவங்களில் மனிதனை ஆட்கொள்ளுகிறது. இதனால் அன்றோ ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்ற கூற்றுக்கு ஏற்ப பாலகன் தொடக்கம் பல்லிழந்த தாத்தா வரை தினமும் மரணத்திற்கு இரையாவது கண்கூடு. கிறிஸ்துவ வாழ்வின்படி மரணம் நித்திய வாழ்வின் ஆரம்பம். இதனை ''நானே உயிர்ப்பும் உயிரும்... (புனித அரு. 11 : 25) என்று வலியுறுத்துகிறது. எப்பொழுதும் இறைவனின் திருவுள்ளத்திற்கு ஏற்ப வாழ்பவனுக்கு மரணம் மகிமையின் கிரீடமாகும். அவனே ஞானியாவான். மனிதன் நீர்க்குமிழி போன்ற வாழ்வை நிலையாக நினைத்தால் அவன் மூடனாவான். இதைச் சிந்தித்து செயலாற்றுங்கள். மரணம் இனிமையான பயணம். நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது இன்பமாக ஏற்க வேண்டிய விடயமாகும்.

துரை ஆரோக்கியதாசன்
விரிவுரையாளர்
பலாலி, ஆசிரிய கலாசாலை.

# புதுப்புனல் காட்டும் பொது அழைப்பு

திருமதி. C. M. மரியாம்பிள்ளை
யாழ்ப்பாணம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நாம் இறைவனின் பிள்ளைகளாகவும் கிறிஸ்துவில் ஒரே குழுமமாகவும் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். இறைவார்த்தையினால் உந்தப்பட்டு விசுவசிப்பவர்களாகவும், விசுவசிப்பதை மறையறிவில் புரிந்து வாழுகிறவர்களாகவும், வாழுவதை வழிபாட்டிலே கொண்டாடுகிறவர்களாகவுமிருக்க அழைக்கப்படுகின்றோம். பொதுநிலை விசுவாசிகள் உலகத்தின் மத்தியில் தமது கிறிஸ்தவ வாழ்வையும், பணியையும் சமகால அறைகூவல்களுக்கு ஏற்ற வகையில் நிறைவேற்ற அழைக்கப்படுகின்றனர்.

கிறிஸ்துவ சீடத்துவம் குழுமவாழ்விலே மலரவேண்டுமென இயேசு விரும்பினார். ஆலயத் திருச்சபையாக, பங்குத் திருச்சபையாக குழும வாழ்வு வாழவும் பணிசெய்யவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நட்புடன் உறவாடி நமது குழுமத்தில் உள்ளவர்களுடன் பகிர்ந்து, வாழ்ந்து ஒருவரோடொருவர் உண்மை உறவுகளை வளர்த்து ஒருமனப்பட்டு வாழ்ந்து, உள்ளத்திலே அமைதியைப் பேணுவதற்கு நமக்குத் தேவையான ஆற்றலை ஆவியானவர் குழும வாழ்விலே நமக்குத் தருகிறார். எனவே, இவ்வாறு ஒவ்வொரு ஆலயத்தையும் சூழ்ந்து வாழ்ந்து, ஒன்றாக வழிபாடு செய்து, உறவிலே, பகிர்தலிலே வாழும் குழுமங்களாக ஆலயத் திருச்சபைகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இதுவரைகாலமும் இந்த எமது அழைப்பை நாம் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. அதனால், வெறும் சடங்குகள் அடையாளங்கள் மட்டுமே கிறிஸ்தவ வாழ்வு என்ற மனப்பான்மைக்கு அடிமையாகிவிட்டோம். எனவே, இத்தவறை நாம் திருத்திக் கொள்ளவேண்டும். ஆதிக் கிறிஸ்தவர்களைப் போல எமது பொது அழைப்புக்கேற்றபடி வாழத்தொடங்குவது அவசியமென்பதை உணருகிறோம். திருப்பலியிலே விவிலியத்தின் ஒரு சில பகுதிகளைக் கேட்டு, சிறிது தியானித்து, செபித்து, அப்பம் பிட்டுப் பலி நிறைவேற்றவும், ஆலயத்தை விட்டு வெளியேறியதும் இனி அதை முழுமையாக மறந்து, அன்றைய வாழ்க்கைப் பிரச்சினைகளை முற்றிலும் வேறுபட்ட விதமாகக் கையாளும் எங்கள் நிலையில் மாற்றம் வேண்டும்.

காலையிலே ஒரு கணம் விவிலியத்தில் ஒரு வசனத்தையென்றாலும் வாசித்து, தியானித்துச் செபித்து, அதனை மனதில் வைத்துக்கொண்டே, அதனடிப்படையில் அன்றைய எமது வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கையாள முயற்சிப்பதும்; மாலையில் ஒரு கணப்பொழுது மட்டுமாவது செலவிட்டு, அன்றைய எமது முயற்சிகளில் நாமடைந்த வெற்றி தோல்விகளைக் கணக்கிட்டு வெற்றிக்காக நன்றியும் தவறுகளுக்காக, 'நாளை முதல் அத்தகைய தவறுகளை இழைப்பதில்லை;' என்றஉறுதிப்பாடும் கொண்டு, இவ்வாறு ஒரு நாளை அதாவது ஒவ்வொரு நாளையும் எமது பொதுக் கிறிஸ்தவ அழைப்புக்கேற்ப வாழ முயற்சித்தால் என்ன?

இப்போது, தூயஆவியின் அருளினால் 2ஆம் வத்திக்கான் சங்கத்தினூடாக, இந்த எமது அழைப்பின் மகிமையை, பெருமையை நாம் உணர்ந்து கொள்ள வழி பிறந்திருக்கிறது. அதே ஆவியின் அலைகள் எம்மைத் தொடட்டும். நாம் எல்லோரும் அந்த ஆவியின் செயற்பாட்டினால் புதிய படைப்புக்களாகி, புதிய பூமியும், புதிய வானமும் படைப்போமாக.

★ வாசகர் கருத்து

# இந்தப் பாதுகாவலன் வேண்டாம்... பிரிவினைகள்

* ச. சின்னப்பநாயகம்

**பாதுகாவலன் ஆசிரியர் அவர்களுக்கு!**

அருட்தந்தையவர்களே,

உங்கள் ஆசிரிய கருத்துக்களில் (விரிவுரைகளில்) எனக்கு அதிகம் கவர்ச்சியுண்டு. அவ்வித கவர்ச்சியின் உருவாக்கம் தான் இத்துடன் இணைக்கப்பட்ட கட்டுரை பாதுகாவலனில் பிரசுரிக்க அனுப்பி வைக்கப்படுகிறது.

எனது வயோதிப (87) பருவ ஆக்கம் கூடையொன்றில் கழிக்கப்படக் கூடாது என்பதே எனது நம்பிக்கை.

தங்கள் பணிவுள்ள
ச. சின்னப்பநாயகம்,

36, சந்தான மாதா,
கோவில் வீதி,
யாழ் பாண்டியன்தாழ்வு.
23-10-94

## நம்ப முடியவில்லையே!!

எழுத்தாளரின் வயது — 87
இளமையான உள்ளம்
கூர்மையான சிந்தனை
ஆழமான கருத்துக்கள்

இவையெல்லாம் இம் முதிர்ந்த வயதிலும் தன் சொந்தக் கையால் மிகவும் தெளிவாக எழுதப்பட்டவை. எதுவித 'தணிக்கை'யுமின்றி வாசகர்களுக்குத் தருகின்றோம்.

'மாணிக்கத்தை' குப்பைக் கூடையில் போடுவார் உண்டோ?!

ஆ—ர்.

அந்த இடமோ ஒரு வாசிகசாலை. பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள்,புத்தகங்கள், ஆய்வுகள்... என்றவாறு பல இன வெளியீடுகளும் அங்கு பரப்பப்பட்டிருந்தன.

இருந்து வாசிப்பதற் கிடமின்றி ஆசனங்களும் நிரப்பப்பட்டிருந்தபோது, ஒரு இடம் மாத்திரம் காலியாக இருப்பதைக் கண்டு அங்கே அமர்ந்தேன். வார வெளியீடுகளுக்குரிய அந்த மேசையில் பத்திரிகையொன்று தேடுவாரற்ற நிலையிற் கிடந்தது. அதுதான் பாதுகாவலன்.

கிறீஸ்தவ நெறியை, வாழ்வை, நாகரீகத்தை... ஏன் அனைத்துச் சமுதாயத்தையுமே வழிநடத்துவதோடமையாது, பாதுகாக்கும் வல்லமையையும் பூண்ட இந்த வார ஏட்டுக்கு இப்படியும் ஒரு புறக்கணிப்பா? என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு அற்புதமான மருந்துச்சரக்கான அதிமதுரத்தின் நினைவும் என்னைத் தொட்டுக் கொண்டது. காட்டுச் சரக்கதனிற் காரமில்லாச் சரக்கெனப் புலவர் ஒருவரால் கழித்துக் கட்டப்பட்ட அதிமதுரம்போல பாதுகாவலனும் மதிப்பிழந்த நிலையில் இங்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதே என்று கவலைப் பட்டேன்.

எம்முட் பெரும் பாலானவர் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும் பாதுகாவலன் ஏட்டுக்கு மதிப்பளித்து வருவதைக் காண்கிறோம். அவர்கள் மதிப்பளித்தாலும் எம்மவர்க்குள் பலருக்கு அப்பத்திரிகை ஒத்துவருவதில்லை. அந்த பாதுகாவலனில் நாமறிய வேண்டிய புதினங்களையோ உள்ளூர் வெளியூர் நிலைபரங்களையோ அறிந்து கொள்ள முடியாதிருக்கிறது; அதனால் அதை ஆதரிக்க வொண்ணாது என எண்ணியது என் மனசு. இல்லை, இல்லை, அதை எடுத்து வாசித்துப் பார் என ஏவியது என் சம்மனசு, அந்தச் சம்மனசின் (மனச்சான்றின்) ஏவுதலையும் புறக்கணிக்கலாமா? தீமையை ஆபத்தை எதிர்த்து நிற்கும் நல்லேவுதலே அச்சம்மனசு என்று அனுபவமுள்ளவர்களும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

### வாசித்தபின் அறிந்த உண்மைகள்

வேண்டா மனத்தோடு அங்கு எதிர்ப்பட்ட பாதுகாவலனைப் புரட்டிப் பார்வையிட்டேன். 14-10-1994இல் வெளிவந்தது. "நீதியான முடிவு ஏற்பட, இதயசுத்தியுடன் ஒத்துழைப்பு நல்குக" என வேண்டுகோள் விடுத்திருந்தார் மேதகு கலாநிதி E. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள். சிறிலங்கா அரசாங்கத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் நல்ல பலனைத் தரத்தக்கதாகத் தாமும் மக்களோடிணைந்து இறைவனை வேண்டுவதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் அனைத்து இனங்களையும் ஒரே தாயின் பிள்ளைகள் போல இணைப்பதில், தேசாபிமானிகளும் மறை ஆயர்களும் மற்றும் பொதுநிலையினரும் எடுத்து வரும் பிரயத்தனங்களையும். பாதுகாவலன் போன்ற நடுநிலைப் பத்திரிகைகளின் பங்களிப்பையும், சமாதானத்தையும் மக்களின் சுபீட்ச வாழ்வையும் விரும்பும் சமுதாயங்கள் பாராட்டக் கடமைப்பாடுள்ளன.

பாதுகாவலனின் மற்றும் இதழ்களைப் புரட்டிப்பார்த்தேன். ஆங்காங்கு எழுதப்பட்ட கட்டுரைகள் அவை சாதாரண போக்கில் அமைந்தனவாயில்லை.மாறாக, அவை பெரும் பட்டதாரிகளின் படைப்புக்களேயெனப் பின்னிட்டு அறிந்துகொண்டேன்.

எடுத்துக்காட்டாக குடும்ப ஆண்டாகப் பிரகடனப் படுத்தப் பட்ட இந்த ஆண்டை, குடும்பங்கள் மீள் ஆய்வு செய்து புதுப்பித்துக் கொள்ளுமாறு திருச்சபை அழைக்கிறது.

ஆரோக்கியமான குடும்ப வாழ்வுக்கு அன்பு பகிர்தல், மன்னித்தல், புரிந்துகொள்ளுதல், விட்டுக்கொடுத்தல், போன்ற அணிகலன்களிற் பங்குபெறுதல் இன்றியமையாதது என்று — குடும்பவளத் துணை இயக்குனர் அருள்திரு செ. யே. இராசநாயகம் அடிகள் வெளியிட்டிருந்தார். அவர் ஒரு M. A. பட்டதாரி.

அந்த வாரப் பாதுகாவலன் முழுவதும், நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்ற கருத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாக அமைந்திருந்தது, ஒரு சிறப்பு அம்சமாகும்.

மற்றுமொரு இடத்தில் ஓர் இள மங்கையின் இரகசியம் என்ற தலையங்கத்தில்-இயேசுவின் குழந்தையான புனித தெரேசாளின் சிறிய அன்பு வழியை விளக்கிய அருள்திரு சி. இ. நீ குணசீலன் "நீங்கள் மனம் திரும்பிக் குழந்தைகளாக மாறாவிடில் விண்ணரசில் நுழைய மாட்டீர்கள்" (மத். 18: 2-3) என்ற நற்செய்தி வாக்கியத்தை எடுத்தாண்டிருக்கிறார். அதாவது கபடற்ற மனத்தையுடைய குழந்தை தன் தாய் தந்தையரில் முழு நம்பிக்கை வைத்திருப்பது போலவே நாமும் இறைவனில் நம்பிக்கை வைத்து அணுகுதல் தரும் என்பது அவரின் கருத்து. இந்த அடிகளாரும் ஒரு M.A M Sc பட்டதாரியே. (அவர் ஒரு கலாநிதியும் ஆவர். ஆ-ர்.)

இவைபோன்ற—நல்வாழ்வுக்கான ஆக்கங்களை வெளியிடும் பாதுகாவலனை யார்தான் புறக்கணிப்பார்? மாறாக யானும் உலகத்தை ஏமாற்றும் தீய சக்திகளோடு சேர்ந்து கொண்டு பாதுகாவலனைப் பகிஷ்கரிக்கப் பார்த்தேன். என் முயற்சி செல்லாக் காசு ஆசை.

### மண்ணாங்கட்டிகள் மோதி-மலையைத் தகர்க்க முடியுமா?

உலகின் பல இன மக்களிடையே ஒன்றித்து வாழ்ந்து கொண்டிருக்கும் திருச்சபையின் வல்லமையை, நரகத்தின் வாசல்கள் மேற்கொள்ள முடியுமா? பல்வேறு அரசுகளும் மற்றும் எதிர்ப்புச் சத்திகளும் திருச்சபைக்கு மாறாக நிற்காத காலமேயில்லை, வெட்ட வெட்டத் தளைக்கும் திராட்சையைப்போல் உபத்திரவங்கள் மத்தியில் அது விசுவாசிகளிடையே வாழ்ந்து கொண்டே வருகிறது.

ஆயினும் பிரிவினைச் சபைகள் கறையான் புற்றுக்கள் போல் பதினாயிரக் கணக்கிற் தோன்றி திருச்சபையின் தூய்மைக்குக் குந்தகம் விளைக்க முயன்று கொண்டுவருவது கவலைக்குரியதே.

கத்தோலிக்க விசுவாசிகள் இப்படியான நாசகாரக் கும்பலின் ஏமாற்று வழிகளை இனங்கண்டு தவிர்த்து நடக்கவும்—தம்மைப் பாதுகாக்கவும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென—பாதுகாவலன் ஆசிரியர் கருத்தோட்டத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் அப்போஸ்தலத்துவத்தைத் தொடர்ந்து-திருச்சபையின் நடைமுறையில் இருந்துவரும் உண்மைகளை, எழுந்தமானமாக எதிர்ப்பதே பிரிவினைகளின் இலட்சியமாக இருந்து வருகிறது. இவர்கள் கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு மாறாக, உலக மதிப்பீடுகளின் படி நடந்துவருவதைக் காண்கிறோம். (எடுத்துக்காட்டுக்கு: கட்டுப்பாட்டை மீறி விவாகம் செய்து கொள்கிறார்கள்.விவாகம் செய்தவர்களும் அதை முறித்து வேறு விவாகம் செய்து வருகிறார்கள். இவை போல்வன உலக மதிப்பீடுகளே). ஆலைப் பாலாக்கினாலும் இத்தகையோரைச் சீராக்கமுடியாதிருக்கிறது. இன்னார்தான் பிரிவினையிலும்—பிரிவினையாக இயங்கி வரும் 34 ஆயிரம் பிரிவினைகளுள் அடங்கியவர். பாவசங்கீர்த்தனம்—நற்கருணை ஆதியாம் திருவருட்சாதனங்களை எள்ளி நகையாடுகிறவர்களும்—இந்த வர்க்கத்தினரே.

புனித கன்னிமரியாளின் கன்னிமையை மாசுபடுத்தும் இதே வர்க்கம் அவளுக்குக் கிறிஸ்துவைத் தவிர வேறு பிள்ளைகளுமுண்டு என நற்செய்தி கூறுவதாகப் பசப்பிக் கொள்ளுகிறார்கள். பரி. ஆவியானவரின் பத்தினியாகப் பாராட்டப்படும் புனித மரியாளிற் சுமத்தப்படும் அவதூறுகள் சாதாரண பழிபாவத்தில் அடங்கி விடப் போவதில்லை. பரி. ஆவியானவருக்கு விரோதமாகக் கட்டிக் கொள்ளும் பாவம் மன்னிக்கப் படாதெனச் சொல்லப்படுகிறதே.

புனிதர்கள் உறவையும்—புனித மரியாளின் வணக்கத்தையும் எதிர்த்து நின்ற லண்டன் அங்கிலிக்கன் சபைகள் ஐந்து றோமன் கத்தோலிக்க வழிபாடுகளுக்கு இணங்கி நடக்க முன்வந்திருப்பதையும் அதே பாதுகாவலன் வார இதழ் வெளியிட்டிருக்கிறது.

இவ்வாறாகப் பெருமளவில் மனந்திரும்பும் புரட்சி இங்கிலாந்து, றஷ்யா, ஆஸ்திரியா... ஆதியாம் நாடுகளில் நடைமுறையில் இருந்துவரும் அதே வேளையில் நல்ல மரத்திற் தொற்றிய புல்லுருவி போன்று அனேகம் பிரிவினைச் சக்திகள் எம்மவர் கிறிஸ்தவ வாழ்வை ஊறு படுத்த முயற்சித்து வருவதைக் காண்கிறோம்.

### மாற்று நடவடிக்கை

எம்மிடையே உள்ள வேதாகம அறிவுக் குறைவை மாற்றான் சாதகமாக்கிக் கொண்டே தான் கருதியதை விதைக்கப் பார்க்கிறான். எனவே எம் குறைபாட்டை நாமேயுணர்ந்து நிவிர்த்திக்க எமது பங்குகளில் நடைமுறையில் இருந்து வரும் மேய்ப்புப் பணி மகா நாட்டின் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவது முக்கியமானது என ஏவுகிறார் பாதுகாவலன் ஆசிரியர்.

எனவே நாம் தவறுதல் வழிகளிற் பிரவேசிக்கும் போதோ அல்லது இறை சித்தத்துக்கு அமையாமல் சுய நலனுக்காக வாழும் போதோ எம்மைத் திருத்தவும், வாழ்வின் இலட்சியத்தில் வழி நடத்தவும் பாதுகாவலன் உதவி வருகிறான் என்பதை நாமுணர வேண்டும். அவனை வேண்டாமென்று தள்ளி வைத்தால் எமக்காதரவு தரும் நண்பனையே தவிர்த்து வைத்ததாக முடியும்.

அதனால் எமது நல்லாயனான பாதுகாவலன் ஏவுதலுக்குச் செவிசாய்த்து எம்மைப் பிரித்து வைக்க முனைந்து நிற்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்க்கக் கூடிய படையணிகளைச் செயல்வடிவில் அமைத்து வெற்றி காண்போம்.

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-85

குருசு : என்ன அடைக்கலம் பெரிய விருந்துபோல?...

அடைக்கலம் : அப்புவின்ர நினைவால சமையல் செய்து சொந்தக்காரர், ஊர்மக்களோட சாப்பாடு போடப் போறம்.

குருசு : தம்பி விருந்துகள் நல்லதுதான். இறந்தவையளை நினைக்கிறதில இருக்கிற அக்கறை இறக்கப்போற முதுமையளையும் நினைச்சு இருக்கேக்க நல்லதைக் கொடுங்கோ. இறந்தபின் படைப்பதைவிட இருக்கும்போது கவனிச்சா அதுவும் ஆத்தும சாந்திதான் பாரு!......

# காவலன் கண்மணிகள்

ஒளி: 8 | சுடர்: 17

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

## காவலன் களஞ்சியம்

### பார்வை: 3

போட்டி விதிகள்

1, காவலன் வாசகர் அனைவரும் பங்குபற்றலாம்.

2. பிரிவுகள்
ஆரம்பப் பிரிவு ...... ஆண்டு 8 வரை
மத்திய பிரிவு ;......... 9 ...... 11 ...... வரை
உயர் பிரிவு ; ஏனையோர்
ஒருவர் ஒருபிரிவில் மட்டும் பங்குபற்றலாம்.

3. பரிசு I) ஒவ்வொரு பிரிவிலும் அதி கூடிய புள்ளிகள் பெறும் நற்பேறாளர் ஒருவருக்கு மட்டும் பரிசு அளிக்கப்படும்.
II) பரிசு ஆ. பி. — ரூ. 25
ம. பி. — ரூ. 25
உ. பி. — ரூ. 30

4. விடைகளை அறிவிக்கும்பொழுது அனுப்பவும்,
வினாக்கள் (படிக்கவேண்டிய இதழ்கள் 14, 15, 16, 17)

அ) 1. மருதமடுத்திருப்பதி ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்ட ஆண்டு எது?
2. நம்மண்ணில் பணிபுரிந்த குருமணி ஒலிவ் ஏமில் o.m.i. இறைபதம் அடைந்த தினம் எது?
3. எம் நாட்டில் சுதேசகுருக்கள் தினம் இவ்வருடம் எப்போது கொண்டாடப்பட்டது?
4. பாப்பிறை பதினொராம் கிறகோறியாரை உரோமைக்குள் மீண்டும் புகவைத்த அம்மையார் யார்?
5. கத்தோலிக்க திருச்சபையின் புதிய மறைக்கல்வி ஏட்டின் ஆங்கில மொழியாக்கத்தின் முதலாவது பதிப்பில் எத்தனை பிரதிகள் விற்பனையாகின?

கண்மணிகளே!

ஆண்டின் 3ஆம் தவணைப் பரீட்சைக்கு உங்களை ஆயத்தம் செய்யும்போது செபத்துடன் படியுங்கள்.

பார்வை 3 : சிறிது நேரம் ஒதுக்குங்கள். இறையேசுவின் ஆசிகள் என்றும் உங்களுடன் இருக்க ஆசிக்கும்

அன்பின், அன்பு விழி,

பார்வை 3 தொடரும்.

---

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

## இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும் -4

லொய்ரிலா எங்கே? அவருடன் வேலை செய்த எல்லாத் தொழிலாளிகளுக்கும் பதில் நன்குதெரியும்.

துவக்கு முனைக்கு அவர்கள் பயப்படவில்லை. "அவர் காணாமல் போய்விட்டார்" எல்லோரும் தனித்தும் ஒருமித்தும் விசாரிக்கப்பட்டபோது அதே பதிலைத்தான் தந்தனர்.

அதிகாரிகளால் எதுவுமே செய்ய முடியவில்லை.

1945ஆம் ஆண்டு 2ஆம் உலகப் போர் முடிந்தபோது தன் ஆறில் ஒரு பங்கு மக்களையும் இழந்து, நாட்டின் எல்லையும் குறுகிய நிலையில் ஜெர்மானிய ஆட்சி முடிந்து பாதுகாப்புஎன்ற போர்வையில் றசிய ஆட்சி தொடங்கியது.

றசிய ஆட்சியாளர்கள் சமயத்தை விரும்பவில்லை. தம் பொது உடமைக் கருத்துக்களைப் பரப்ப போலாந்தின் கத்தோலிக்க சமயத்தை அழிக்க முற்பட்டனர்.

உலகிலேயே பெரிய கத்தோலிக்க நாடுகளில் ஒன்று போலாந்து. இங்குள்ள மூன்றரை கோடி மக்களுள் 90 வீதமானவர் கத்தோலிக்க மக்கள். ஆயிரம் ஆண்டுகளாக அவர்கள் இரத்தத்தில் கலந்துவிட்ட "கத்தோலிக்கத்தை" எடுத்த எடுப்பில் அகற்ற முடியுமா?

அவர்களைப் பகைத்துக் கொண்டோ, அழிக்கும் திட்டத்துடனோ ஆட்சி நடத்த முடியாது என்பதைப் புரிந்த பொது உடமை அரசு அவர்கள் சமயத்தை கண்டும் காணாமல் இருப்பதைவிட வேறு வழி இன்றித் தவித்தது.

பொது உடமை நாடுகளில் கத்தோலிக்க பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டபோதும் போலந்துநாட்டின் லும்பிலின் நகர் பல்கலைக் கழகம் மட்டும் இயங்கியது.

இத்தகைய பின்னணியில் தான் கரோல் லொய்ரிலா தன் குருத்துவப் பயிற்சியைத் தொடர்ந்தார்.

"ஆன்றே ஜாவின்" என்ற புனை பெயரில் எழுதப்பட்ட கவிதைகள், அவரின் பேச்சு, நடிப்பு என்பவற்றால் அன்னிய ஆட்சிக்கும், அடக்கு முறைக்கும் எதிராகக் குரல் கொடுத்தார். 'ஸ்நாக்" என்ற கத்தோலிக்கப் பத்திரிகை இவரின் கருத்துக்களை அடிக்கடி வெளியிட்டு வந்தது.

ஜெர்மானிய இனவெறியோ, பொது உடமை அடக்கு முறையோ இவரின் நாட்டுப் பற்றையும், கத்தோலிக்க திருச்சபை பால் உள்ள அன்பையும் குறைக்கவேயில்லை. மாறாக அதிகரித்தன.

1946ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். நவம்பர் 2ஆம் நாள் இறந்த அனைத்து ஆன்மாக்கள் தினத்தில் முதல் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

இறந்த தன்குடும்பத்தவர் அனைவருக்காகவும், அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தன் முதல் பலியை ஒப்புக்கொடுத்தார்.

இவர் குருவானவுடன் கரோல் லொய்ரிலா-எமிலியா குடும்பம் வாரிசற்ற ஓர் குடும்பமாகி விட்டது.

குருவான பின்பும் படகோட்டும் விளையாட்டில் அதிகம் ஈடுபடுவார். ஒரு நாள் விடுமுறைவேளை மசூரியஸ் ஏரியில் இளம் நண்பர்களுடன் படகோட்டும் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார். அப்போ அவருக்கு ஓர் அவசர அழைப்பு வந்தது. ஏன் உடன் வரும்படி அழைக்கவேண்டும்? அவ்வளவு அவசரம் என்ன? அவரின் நண்பர்களும் குழம்பிப் போயினர். படகோட்டும் விளையாட்டை அப்படியே நிறுத்திவிட்டு விரைந்தார். கருதினால் விஷன்ஸ்கியின் அவசர அழைப்பு அது.

(வளரும்)

---

விண்ணக வாழ்வில்

### மூன்று ஆண்டுகள்



திருமதி மேரி மாகிறேட்
பஸ்ரியாம்பிள்ளை

மலர்வு 05-04-1912 — உதிர்வு 19-11-1991

"புகழ்பாக்கள் இசைத்துக் கொண்டு அவர் திருமுன் செல்வேன். இன்னிசைப் பாடல்களுடன் அவர் முன்னிலையில் அகமகிழ்வேன்".

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக, சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் 19-11-1994 (சனி) காலை 6-00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

A/50/94

---

### முதலாம் ஆண்டு நினைவு



திருமதி
குருசுப்பிள்ளை அக்னஸ்
மலர்வு 07-05-1913 அழிப்பு 13-11-1993



செல்வன்
சிங்கராயர் ஜானி கனோஜி
மலர்வு 27-12-1985 அழிப்பு 13-11-1993

### 10ஆம் மாத நினைவு



செல்வி
குருசுப்பிள்ளை அருள்நாயகி
மலர்வு 06-05-1947 அழிப்பு 09-01-1994

" சிவியத்தில் இவர்களை நேசித்தவர்களே! மரணத்திலும் இவர்களை மறவாதீர்கள் "

அன்பான அம்மாவே! அருமைச் சோதரியே!
இறையருளால் வந்துதித்தெம் கலிதீர்த்த முதன் மகனே!
புகலிடமாம் ஆலயமே உம் உடல் கருகும் தலமானதோ!
அழுதழுது ஆற்றாமல் துடிக்கின்ற மனதோடு,
உம் இளைப்பாற்றிதனை வேண்டி ஆண்டவரைத் துதிக்கின்றோம்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 13-11-1994 ஞாயிற்றுக்கிழமை காலை 11-00 மணிக்கு யாழ். புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறுவோர் இவர்களுக்காக செபிக்க வேண்டிநிற்கிறோம்.

இவர்களின் பிரிவால் துயருறும்
மகன் – தந்தை – சகோதரன்: குருசுப்பிள்ளை சிங்கராயர்,
மருமகள் – தாய் – மைத்துனி: சிங்கராயர் பிலோமினா,
பேரன் – சகோதரன் – மருமகன்: சிங்கராயர் ஷானஸ் நௌறோஜி,
உற்றார், உறவினர்.

அடப்பன் வீதி,
இல. 15, 1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

A/53/94

---

### 3ஆம் 1ஆம் வருட நினைவஞ்சலி



C. S. நாயகம்
ஓய்வுபெற்ற புகையிரத அதிபர்
(மலேசியா)
மண்ணில்: 3-10-1901
விண்ணில்: 28-1-1991

செல்வநாயகி
23-7-1901
20-11-1993

அனைவருக்கும் மீட்பளிக்க அவனியில் மனுவுருவான யேசுவே! எங்களை நீண்ட காலம் பராமரித்து அன்புசெய்த எங்கள் மம்மி, பப்பா, செல்வநாயகி, சவுந்தரநாயகம் முடிவில்லாத வாழ்வில் பங்குகொண்டு முழுவாழ்வு பெறச் செய்வீர்களாக. ஆமென்!

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 21-1-1993 திங்கட் கிழமை காலை அருள் ஆச்சிரமத்திலும், புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திலும், புனித யுவானியார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவர்களின் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

பத்திமா இல்லம்,
பத்தாவத்தை, இளவாலை.

தகவல்: அன்று மரியோசெல்வ
(பேரன்) U. K.

A/52/94

# மணிலா சென்ற குருமணியின் நினைவலைகள்

செவ்வி கண்டவர் * அருள்திரு சாள்ஸ் கொலின்ஸ்

*கடந்த மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகராம் மணிலாவில் இடம்பெற்ற மூன்று வார கருத்தரங்கில் பங்குபற்றிய யாழ். மறைமாவட்ட குரவரான*

*❊ அருள்திரு ஜெறோம் செல்வநாயகம் அடிகளாருடன் ஒரு சில மணித்துளிகள்.*

● **நீங்கள் அண்மையில் மணிலா சென்று வந்துள்ளீர்கள். சென்ற தன் நோக்கத்தை சுருக்கமாக கூறுவீர்களா?**

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற 8வது உலக ஆயர் பேரவையில் குருக்களின் தொடர் உருவாக்கம் பற்றியும் அதனையிட்டு வெளியிடப்பட்ட 'Pastores Dabo Vobis' சுற்று நிருபத்தின் பின்னணியில் FABC அமைப்பினால் இளம் குருக்களுக்கான தொடர் உருவாக்கம் பற்றி ஆசிய பிராந்திய குருக்களுக்கென நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபற்றச் சென்றிருந்தேன்.

● **நீங்கள் கலந்துகொண்ட கருத்தரங்கில் ஆராயப்பட்ட விடயங்கள் பற்றி என்ன கூறுவீர்கள்?**

குருத்துவ உருவாக்கம் வாழ்வு முழுவதும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஓர் தொடர் பயணமாகும். குருத்துவ அழைத்தல் குடும்பத்தில் உணரப்பட்டு படிப்படியாக குருத்துவக் கல்லூரியில் வளர்த்து, திருநிலைப்படுத்தலில் அங்கீகாரம் பெற்று வாழ்வு முழுவதும் மீண்டும் மீண்டும் புதுப்பித்து, மெருகூட்டி வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆன்மீக, உளவியல் கல்விசார் பயிற்சியைக் குருமடத்தில் பெற்று ஆரம்ப காலங்களின் நிலையை பணித்தளங்களில் எதிர் நோக்கும் பிரச்சனைகள், சவால்கள் பற்றி இப் புதுப்பித்தல் கருத்தரங்கில் ஆராயப்பட்டது.

● **நிச்சயம், இக்கருத்தரங்கு உங்களுக்கு ஓர் தனிப்பட்ட அனுபவமாயிருக்கும். அதைப் பகிர்ந்து கொள்வீர்களா?**

எனது சொந்த அனுபவத்தை என் சக குருக்களோடு பகிர்ந்து பழகும் இந்த வாய்ப்பின் மூலம் பலதரப்பட்ட அரசியல், சமய சமூகச் சூழல்களில் ஆங்காங்கே திருச்சபை எவ்வாறு கிறிஸ்துவுக்குச் சாட்சியம் பகர முற்படுகிறது என்றும், அங்கே குருக்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அறிய முடிந்தது. இதன் மூலம் பரந்த, பன்முகத்தன்மை கொண்ட குருத்துவப் பணியும் வாழ்வும் பற்றி என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

● **யாழ். மறைமாவட்டத்தில் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் எமது குருக்கள் பணிபுரிகின்றார்கள். அத்தோடு எமது மக்கள் துன்பப்படும் நிலையை எடுத்துக்கூற வாய்ப்பு கிடைத்ததா?**

பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன, குறிப்பாக மறையுரை, செபவழிபாடு; குழுக்களில் அறிமுகம் செய்யும் வேளையில் நான் பகிர்ந்து கொண்டதை மிக அனுதாபத்துடன் கேட்டார்கள் இன்னும் வசதிக் குறைவுகள் மத்தியிலும் மிக ஆர்வத்துடன் எமது இளம் குருக்கள் பணிபுரிவதையிட்டு அவர்கள் வியப்பும், பெருமையும் அடைந்தார்கள். ஷெல், விமானத் தாக்குதல் மத்தியில் துணிவுடன் மறைப்பணி புரியும் எமது குருக்களின் தனித்துவமான பணியும், வாழ்வும் பற்றி எடுத்துக்கூற முடிந்தது.

★ நன்றி, அருட்தந்தை ஜெறோம் செல்வநாயகம், உங்கள் தனித்துவமான அனுபவத்தை பகிர்ந்து கொண்டமைக்கு நன்றிகள்.

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



பண்டிதர்
அமரர் மு.க.க. அருட்பிரகாசம்
(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம் 04-12-1914 மறைவு 15-11-1992

"ஆண்டவர் என்றும் என் கண் முன் உள்ளார். இதனால் என் உள்ளம் மகிழ்ந்தது."
(அப். பணி. 2;25)

இறையண்டை சேர்ந்தீர்,
ஈராண்டுகளாயிற்று.
கறை நீக்கி வாழ்ந்தீர்,
நிறைவாகக் கற்றோம்.
குறையில்லா வாழ்வில்
தினம் தோறும் உமக்காய்
துதி பாடுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.
'எமிலகம்' வளன்புரம்
கொழும்புத்துறை.

## கத்தோலிக்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டங்களிலும் பெண்களுக்கு உண்மையான இடமளிக்கப்படுமென நம்புகிறோம்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவரும், பிரதிநிதிகளாக வந்திருந்து வேறு சில கன்னியரும் பெண்கள் விவகாரம் குறித்து பேரவையில் உரையாற்றினர். திருச்சபையில் குருக்கள், துறவியர், கன்னியர் வாழ்வு பற்றி ஆராய்வதற்கு உலகின் பல பாகங்களிலுமிருந்து 348 பிரதிநிதிகள் கூடியிருந்த இப்பேரவை ஒரு மாதகாலம் நீடித்தது. அதில் பெண்களின் உரிமைகள் ஒரு முக்கிய விடயமாக இருந்தது.

பெண்களை ''பொதுநிலைக் கருதினால்கள்'' ஆக்கவேண்டுமெனக் கூறி ஓர் ஆபிரிகக ஆயர் சபையோரை திகைக்க வைத்தார். பெண்களுக்கு தீர்மானமெடுக்கும் பதவிகள் கொடுக்கப்படவேண்டும் என்பதைப் பல ஆயர்கள் ஆதரித்தனர்.

திருச்சபையில் திருநிலைப் படுத்தப்பட்டோர், அதாவது வார்த்தைப்பாடு செய்த குருக்கள், துறவியர், கன்னியர் தொகையில் 72 வீதமானோர் பெண்களாவார். இப்பேரவையில் 59 பெண்களே அங்கத்துவம் பெற்றிருந்தனர். பிரதிநிதிகளுள் பெரும்பாலோர் ஆயர்களே.

''பெரும்பாலும் தங்களைப் பற்றி ஆண்கள் ஏற்படுத்திய உருப்படிவத்தையே பெண்கள் மனதிற் கொண்டிருக்கின்றனர். இது வெளியிலிருந்து அவர்கள் மேல் திணிக்கப்பட்டது. பெண்களின் தன்மைகளை அது பிரதிபலிக்கவில்லை,'' என சகோதரி புல்லங்கர் கூறினார்.

டொறிஸ் என்னும் மற்றொரு சகோதரி திருச்சபையில் பெண்கள் பல நன்மைகளை அனுபவித்திருந்தாலும் துன்பத்தையும், ஏமாற்றத்தையும் கூட அனுபவிக்கவேண்டியிருந்தது எனக் கூறினார்.

பெண்ணுரிமைவாதம்- பெண்களின் ஆற்றல்கள் முழுமையாக விருத்தியடையச் செய்வது- காலத்தின் அறிகுறியாகவும், திருச்சபையின் ஒரு கொடையாகவும் இருக்கிறதென நாம் கருதுகின்றோம்'' என சகோதரி டொறிஸ் கூறினார்.

## மன்னார் ஆயர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயர் மேதகு இரா. யோசவ் ஆண்டகை அவர்கள் வருகை தரவுள்ளார். கல்லூரி அதிபர் அருள்திரு. A.I. ப்பனாட் அடிகளார் கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார்'

## கத். இலக்கிய வட்டம் நடாத்தும் போட்டி நீடிப்பு

நத்தார் நாள் மகிழ்வாக கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் நடாத்தும் நாடக, குட்டிக்கதை, கவிதை போட்டி 25-11-94வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரங்களை சென்ற பாதுகாவலனில் அறிந்துகொள்ளலாம். உங்கள் படைப்புக்களை உடன் அனுப்பி தரமான பரிசுகளை தட்டிக் கொள்ளுங்கள்.

## உடுவில் ஆர்க்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லம் சமூகத்திற்கு ஆற்றிய அரும் பெரும் பணிகளை எடுத்துக் கூறினார். இப்போர்கால சூழ் நிலையில் இவ் அமைப்புக்களின் அரும்பெரும்பணிகளை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் இக்குழந்தைகளின் செலவினங்களுக்காக யாழ் ஆயர் மேன்மைமிகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களும், மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் அருள்திரு. ஜெபநேசன் அடிகளாரும் பல உதவிகளைச் செய்துள்ளனர் என்றும் கூறினார். அதன்பின் இசை நிகழ்ச்சி ஆரம்பமாகி 7-20மணியுடன் நிறைவடைந்தது. அதனைத் தொடர்ந்து அருட்சகோதரி ஜோசேப்பின் மென்டிஸ் தமதுஉரையில், நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள். இறைவன் தமது படைப்பில் அனைத்துமே நல்லது எனக் கண்டார். எனவே அனைவரையும் அரவணைப்பது எமது கடமை எனக் கூறினார். தி. கு. மாகாணத் தலைவி அருட்செல்வி சோபியா தமது உரையில் இளைஞர்களின் உன்னத பணியை மனதார பாராட்டினார்.

தகவல்: கிறிசான் வேதநாயகம்

நம் மண்ணில் பணிபுரிந்த குருக்கள்

## இறைபதம் அடைந்த தினம்

நன்றியுடன்

## "செபிப்போமாக"

நவம்பர்

| | | |
|---|---|---|
| 15 | மார்கறீற் C. o.m.i. | 1956 |
| 16 | ஓ வென் W. o.m.i. | 1920 |
| 18 | டெ ஸ்ரெவனிஸ் J. (சகோ.) o.m.i. | 1878 |
| 20 | குக்ரின் A. o.m.i. | 1959 |
| 22 | துரைசிங்கம் G. F. v. d. | 1979 |
| 25 | டுபிறேய் M. C. o.m i. | 1912 |
| 25 | டெசி L. o.m.i. | 1979 |
| 29 | குறே F. o.m.i. | 1901 |
| 29 | சந்தியாப்பிள்ளை K. B. * | 1989 |

( * யாழ் மறைமாவட்டக் குருக்கள் )

வெளிவந்துவிட்டன

## திருமறைக் கலாமன்ற வெளியீடுகளான

1. காலையும் மாலையும்
2. மண்ணே சாட்சி
3. புதிய பூமி
4. கோபுரத்தில் குழப்பம்
5. பூசலும் புகழும்
6. வேதனுக்கு வேள்வி
7. சாம்பல் மேடு
8. மணப்பெண்
9. இரட்டையர்
10. கனவு பலித்தது
11. செங்கடல்

எனும் திருமறை நாடக நூல்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதி ஒன்றின் விலை ரூபா இருபது.

யாழ் ஆயரின் தாயார் - சகோதரியினது

## 30ஆம் ஆண்டு நினைவு



திருமதி சவிரியாச்சி இம்மானுவேல்
செல்வி அன்ரோனியா இந்திரா இம்மானுவேல்

இறப்பு : 17-10-1964

கொழும்பு, கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் ஒக்டோபர் மாதம் 17ஆம் 18ஆம் நாள்களில் மாலை 6 மணிக்கு இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

இரக்கமுள்ள யேசுவே! இவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

அன்பு, நன்றியுடன் நினைவுகூருவோர்
யாழ். ஆயர், அன்னாவும்
பொஞ்ஜீன் தம்புவும் பிள்ளைகளும்.
89, சென். பெனடிக்ற் வீதி, கொட்டாஞ்சேனை.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில்1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.